Centre for Equality and Justice

# பெண்கள் மற்றும் இழப்பீடு தொடர்பான அடுத்தகட்ட நகர்விற்கான சிவில் சமூகத்தின் அறிக்கை

இலங்கையில் இழப்பீடு வழங்குவதற்கான அடுத்தகட்ட நகர்வை மதிப்பிடுவதற்காகரூபவ் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையமானது சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுடன் ஜூலை 28 அன்று கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்குசெய்தது. அக்கலந்துரையாடலின் விளைவாக கீழே உள்ள அறிக்கை அமைந்துள்ளது. இதில் பெண்களுக்கான இழப்பீடுகளுக்கு அதிகூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கீழே கைச்சாத்திட்டுள்ள நாம்ரூபவ் சிவில் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் என்ற ரீதியில் நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கத்தின் எதிர்காலம் குறித்து மிகுந்த அக்கறை செலுத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்க இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு தொடர்பாக கவனத்தை வெளிப்படுத்தியுள்ளோம்.

நிர்வாக மாற்றம், உலகளாவிய நோய்தொற்று பரவல் அல்லது அச்சுறுத்தல், எதிர்நோக்கவிருக்கும் உலகப் பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் அடிப்படையில, இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள எந்த முன்னேற்றத்தையும் குறைமதிப்பீட்டிற்கு உட்படுத்தாமல், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டிற்கான அலுவலக சட்டத்தின்படி இழப்பீடு வழங்குவதை அரசாங்கம் தொடர்வது மிகவும் முக்கியமாகும்

அரசின் கடமையான மனித உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல், மறுக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ள, சமமான வகையில் முன்னேற்றுவதற்கா இழப்பீடுகளை விரைவுபடுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம். இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் கருத்து, பிறந்த இடம் போன்ற எந்தவொரு காரணத்தையும் பொருட்படுத்தாமல், அனைத்து இலங்கையர்களின் உரிமைகளின் ஒரு முக்கிய அங்கமாக இழப்பீடு வழங்குவதற்கான திட்டத்தை நாம் அங்கீகரிப்பது கட்டாயமாகும்.

இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் செயல்திறனைத் தடுக்கும் நிர்வாக மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் விசாரிக்கப்பட்டு திறம்பட தீர்க்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். இதனடிப்படையில் வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இழப்பீடுகளை வழங்குவதை எளிதாக்க, இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகம் உருவாக்கிய கொள்கைகளுக்கு அமைச்சரவை தேவையான ஒப்புதலை விரைவாக வழங்குமாறும் இலங்கை அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்

இழப்பீடுகளை நீதியின் ஒரு வடிவமாக கருதுவதோடு "தாமதமாக கிடைக்கப்பெறும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம்" என்பதை அங்கீகரிக்கவும் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் சேவையை நாடுவது தற்போது குறைவாக இருப்பதால், நடமாடும் சேவைகள் (மொபைல் கிளினிக்குகள்) மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊக்குவிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

**இதனடிப்படையில் பின்வரும் விடயங்களை ஊக்குவிக்குமாறு அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்:**

- இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் விதிமுறைகளை பண இழப்பீடு வழங்கலுடன்/நட்ட ஈட்டுடன் மாத்திரம் மட்டுப்படுத்தாமல் அதன் செயற்பாடுகளுக்கு தெளிவான விளக்கமளித்து அதைப் பயன்படுத்துதல்.
- சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேறு வகையான இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சட்டத்தில் வெளிப்படையாக உள்ளடக்கப்படாத இழப்பீடுகளின் வடிவங்களை ஆராய்ந்து, இழப்பீடுகளுக்கு ஒரு உறுதியான மற்றும் மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவை செயல்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தை ஆராய்தல்.

- இலங்கையில் எச்சமூகக் குழுக்கள் மற்றும் இடங்களில் உள்ள மக்கள், விழிப்புணர்வு இன்மை, தகல்களை அறியாமை, புவியியல் அமைவிடம், உரிமை மீறல் அல்லது இழப்பு ஏற்பட்டு அதிககாலம் கடந்தமை மற்றும் அவர்கள் இலகுவில் பாதிப்படையக்கூடிய குழுக்களாக, (உதாரணமாக மலையக சமூகம் அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராகக் காணப்படுகின்றமை) போன்ற காரணங்களினால் இழப்பீட்டினைப் பெறாமல் இருப்பது தொடர்பாக மதிப்பீடு செய்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் சேவைகள் ஆயுத மோதல் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும், ஆயுத மோதலுக்கு முன்னும் பின்னும் எழுந்த கலவரங்கள், கிளர்ச்சிகள் மற்றும் மோதல்களையும் இது உள்ளடக்கியது என்பதையும் தெளிவுடன் அறிவித்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகமானது நாடு முழுவதும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதோடு பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் நபர்களுக்கு இழப்பீடுகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்தல்.

- பெண் குடும்பத் தலைவர்களுக்கு நிலையான வருமானம் ஈட்டும் வழிமுறைகள் இருப்பதை உறுதி செய்வதற்கு தந்திரோபாயங்களை உருவாக்குவதோடு இழப்பீடுகளுக்கான அலுவலகம் அவர்கள் அனுபவித்த ஏனைய இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் அவர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பை வழங்குதல்.

- இழப்பீட்டிற்கான அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் பாதிக்கப்பட்ட நபர்களின் பிரச்சினைகள் மற்றும் துன்பங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல். அதேவேளை அனைத்து உத்தியோகத்தர்களையும் பால்நிலை தொடர்பாக கூர்வுணர்வுப்படுத்தல்.

- எந்தவொரு பாலியல் வன்முறையையும் எதிர்கொண்டவர்கள் உட்பட அனைத்து வகையான பாதிக்கப்பட்டத் தரப்பினருக்கும் இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதனை உறுதிசெய்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகத்தை அணுகுவோரின் தேவைகள் இரகசியத்தன்மையுடன் நடத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல். தேவைப்படும்போது பெண்களுக்கு அவசியமான ஆலோசனை மற்றும் உளநல சுகாதார சேவைகளை வழங்குதல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகத்திலிருந்து சேவைகளைப் பெறும் பெண்கள் தங்கள் துன்பங்களின் விவரிப்புகள் மூலம் மீண்டும் அதிர்ச்சியடையாமல் இருப்பதை உறுதிசெய்து, பாதிக்கப்பட்டப் பெண்கள் தங்கள் கௌரவத்தை நிலைநிறுத்தும் ஒரு மனிதாபிமானத்துடன் கையாளப்படுவதை உறுதிசெய்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பால்நிலை கூர்வுணர்வு குறித்த பயிற்சி அளித்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் ஊழியர்கள் (அதன் பிராந்திய மையங்களை உள்ளடக்கியதாக) இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதையும் உறுதிப்படுத்தல்.

- நாடு முழுவதிலுமிருந்து பாதிக்கப்பட்டத் தரப்பினர் இழப்பீட்டிற்கான அலுவலகத்தினை அணுகுவதனை எளிதில் உறுதி செய்வதற்காக அதன் பணியை பரவலாக்குதல்.

- குறிப்பாக பெண்கள் மத்தியில் இழப்பீட்டிற்கான அலுவலகத்தை அணுகுவதை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகம் இலங்கையின் அனைத்து சமூகங்களினாலும் சமமாக அணுகக்கூடியது என்ற கருத்தைப் பொது மக்களுக்குள் ஊக்குவிப்பதற்காக அரச அனுசரனை/ நிதியுதவி வழிமுறைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தல்.

- இலகுவில் பாதிக்கப்படைக்கூடிய குழுக்களான பெண் குடும்பத் தலைவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்போர் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதிசெய்து, கோரப்பட்ட இழப்பீடுகளும் திறம்பட விரைவாக வழங்கப்படுதல்.

- ஆயுத மோதலின் போது காணாமல் போன மற்றும் இராணுவக் கணவரின் மனைவியர் மற்றும் இராணுவ ஊழியர்களின் குடும்பங்கள் தொடர்பாக இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் கொள்கையை தெளிவுபடுத்துதல்.

- பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள் போன்ற அரச நிறுவனங்க, இழப்பீடு தொடர்பாக தெளிவூட்டப்படுகின்றன என்பதையும், இழப்பீடு வழங்குவதற்கு விண்ணப்பிக்க இதுபோன்ற அறிக்கைகள் தேவைப்படும்போது பாதிக்கப்பட்டத் தரப்பினருக்கு விரைவான செயல்முறைகள் மூலம் பொலிஸ் அறிக்கைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் உறுதி செய்தல்.

- சமூகத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் ஒன்றிணைக்கப்பட்ட முன்னாள் பெண் போராளிகளைப் பற்றிய இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துதல்.

- ஆயுத மோதலில் கடமையில் இருந்தபோது உயிர் இழந்த அரச ஊழியர்கள்/அரச ஊழியர்களின் குடும்பங்கள் தொடர்பாக இழப்பீட்டு அலுவலகத்தின் கொள்கையை அறிவித்தல்.

- காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டிற்கான அலுவலகம் மற்றும் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் வழங்கும் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

- பாதிக்கப்பட்ட பெண்கள், அன்புக்குரியவர்களை நினைவுகூருவதை எவ்வாறு சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் காண்பிக்கும் நோக்கில் செய்கிறார்கள் என்பதையும் அது எவ்வாறு ஆண்களால் முன்னெடுக்கப்படும் (இராணுவக் கருத்தோடு) நினைவுகூரலில் இருந்து வேறுபடுகின்றது என்பதையும் மதிப்பிடுதல்.

- நினைவுகூரல் தளங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான இடங்களாக கருதப்பட வேண்டும் என்பதை இழப்பீட்டு செயன்முறையில் உணர்ந்து கொள்ளுதல்.

- ஆயுத மோதலின் எந்தவொரு காலப்பகுதியிலும் இடம்பெயர்ந்து முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டவர்களுக்கு போதுமான இழப்பீடு வழங்கப்படுவதை உறுதிசெய்தல்.

- நிலையான அமைதி, போராட்டத்திற்கான தீர்வு மற்றும் இழப்பீடுகள் போன்றவற்றில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்தல்.

- இழப்பீட்டிற்கான அலுவலகமானது, இலங்கையில் போராட்ட சூழலில் நிலம் மற்றும் சொத்துக்களை இழந்த பெண்களுக்கு இழப்பீடு வழங்குவதை உறுதிசெய்தல் வேண்டும்.

- இனம், மதம், பால்நிலை அல்லது இதுபோன்ற வேறு எந்த அளவுகோல்களின் அடிப்படையிலும் பாகுபாடு இன்றி இழப்பீடுகளுக்கான அலுவலகம் மூலம் கடந்த காலங்களில் இழந்த உயிர்களை நினைவுகூருவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல். இலங்கையின் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சமத்துவத்திற்கான அடிப்படை உரிமை, இழப்பீட்டு அலுவலகத்தின் பணியில் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.

**நீதி மற்றும் அனைத்து மனிதர்களுக்குமான உரிமையை மையமாகக் கொண்டு கடந்தகால பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்காக இழப்பீட்டிற்கான அலுவலகத்தை திறம்பட பயன்படுத்தவும் நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கவும் இலங்கை அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகின்றோம்.**